**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்— சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த முத்துலெட்சுமி என்ற மனவளர்ச்சி குன்றிய பெண்ணிற்கு குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 357(ஏ)ன் கீழ் சிவகங்கை நீதித்துறை நடுவர் அவர்களின் தீர்ப்பின் அடிப்படையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/— நிவாரண நிதியுதவி வழங்குதல்— ஆணை— வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(ப) எண்.01

நாள்:20—01—2014
விஜய, தை 7,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க.—1/2575/12, நாள் 09.02.12 மற்றும் 3.9.12.
2. அரசாணை(நிலை) எண்.08, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 14—05—2010.
3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடித எண்.2978/மா.தி.ந.2./13, நாள் 10.7.13.

—————————

**<u>ஆணை:</u>**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கொலை, கற்பழிப்பு மற்றும் படுகாயம் ஏற்படுத்துதல் போன்ற குற்றச் செயல்களினால் பாதிக்கப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு நஷ்டஈடு வழங்கும் வகையில், ''துயறுவோர் நிவாரண நிதி'' உருவாக்கவும், இதற்கென மாவட்டத்திற்கு ரூ.1.00 இலட்சம் நிதி ஒப்பளிப்புச் செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு எழுதியுள்ள மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், கண்ணமங்களம் அஞ்சல், செந்தமிழ்நகர், முகவரியைச் சேர்ந்த மனவளர்ச்சி குன்றிய முத்துலெட்சுமி என்ற பெண்ணை, செல்வம் என்பவர் பாலியல் பலாத்காரம் செய்தது தொடர்பாக, சிவகங்கை தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் உதவி அமர்வு நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண்.390/2009ல் நடந்து, மேற்படி வழக்கின் 25.11.2011ம் தேதிய தீர்ப்புரையில் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 357(ஏ)ன் கீழ் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மாநில அரசு மாவட்ட ஆட்சியர் மூலம் இழப்பீடு வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே மேற்படி பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மேற்படி நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் இழப்பீடு வழங்குவதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொண்டதின்படி, முதன்மைச் செயலாளர்/ மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிக்கை கோரப்பட்டது. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், பாலியல் பலாத்காரத்தால், பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு, மேலே இரண்டில் காணும் அரசாணையின்படி, 'தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகளுக்கான துயர் உறுவோர் நிவாரண நிதி'யின் கீழ் மாவட்டத்திற்கு ரூ.1,00,000/— ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து, ரூ.5,000/— இழப்பீடு தொகையாக வழங்க, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், சிவகங்கை மாவட்டம் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், எனினும், இந்நேர்வில் கருதப்படும் மனவளர்ச்சி குன்றிய முத்துலெட்சுமி என்ற பெண்ணிற்கு சிறப்பினமாக கருதி, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணை பத்தி 6(v)(c)ல், ஆணையிடப்பட்டுள்ள 'தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகளுக்கான துயறுற்றோர் உதவி நிதி'யின்

கீழ், உதவி பெறும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் அல்லது அவர்களின் வாரிசுதாரர்கள், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தோ அல்லது துயர் உறுவோர் உதவி (பொது) நிதியிலிருந்தோ உதவித் தொகை பெற்றிருத்தல் கூடாது என்பதற்கு விலக்களித்து, ரூ.5,000/– துயர் உறுவோர் உதவி நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்பட்டிருப்பினும், கருணை அடிப்படையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/– இழப்பீடு தொகையாக வழங்க நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமாக பரிசீலனை செய்த பின்னர், சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், கண்ணமங்களம் அஞ்சல், செந்தமிழ் நகரைச் சேர்ந்த முத்துலெட்சுமி என்ற பெண்ணிற்கு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதினால் ஏற்பட்ட பாதிப்பிற்கு துயர் உறுவோர் நிவாரண நிதியிலிருந்து ரூ.5,000/– ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பினும், குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 357(ஏ)ன் கீழ் குற்றவழக்கில் பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென்று குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டம் 41/2010ன்படி, ரூ.1,00,000/– இழப்பீடாக வழங்கிட ஏதுவாக, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 6(V)(C)-ற்கு சிறப்பினமாக கருதி விலக்களித்து, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) நிவாரணமாக நிதியுதவி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூபாய்1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) காசோலையை சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்குமாறு அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி (மு.பொ.நி.நி)துறை, சென்னை–9 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேற்படி நிவாரணத் தொகையை காசோலையாகவோ அல்லது அஞ்சலக சேமிப்புக் கணக்கு மூலமாகவோ உரிய நடைமுறை விதிகளின்படி, பாதிக்கப்பட்ட மனவளர்ச்சி குன்றிய செல்வி. முத்துலெட்சுமி அவர்களின் தந்தை திரு. வெள்ளையன் அவர்களுக்கு வழங்கி, அவரிடம் வரிவில்லையிட்ட பற்றுச் சீட்டை பெற்று, அதில் வட்டாட்சியர் பதவிக்கு குறையாத அலுவலரின் சான்றொப்பதுடன் உரிய அலுவலக முத்திரையுடனும் அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி(மு.பொ.நி.நி) துறை, சென்னை–9 அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறும், அதன் நகலினை அரசின் மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கு அனுப்பி வைக்கமாறும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.1701/Fin/CMPRF/2013, நாள் 10.1.13– ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி(மு.அ.பொ.நி.நி)த் துறை,
சென்னை–9 (3 நகல்கள்) (தனிநபர் மூலமாக)
மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை மாவட்டம்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் தனி அலுவலர், சென்னை–9.
செல்வி. முத்துலெட்சுமி, த/பெ. வெள்ளையன். இளையான்குடி வட்டம், கண்ணமங்களம் அஞ்சல், செந்தமிழ்நகர், சிவகங்கை மாவட்டம்.

**நகல்:**
நிதித் துறை, சென்னை–9.
இ.கோ/உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.